# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, த. மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, ஓகத்து மாதம் 10 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.50** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2012 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, த. மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. கூட். 17/2011*

**த. மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

"த. மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்குமுன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமாகவிருக்கு மாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, த. மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*த. மு. தசாநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) த. மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத் தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "த. மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ்

2-PL 006026 -950 (2011/05)

இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) சுயதொழிலின் ஊடாக வேலையற்றோரையும் வறிய வர்களையும் சிறந்தவொரு வாழ்வாதாரத்திற்கு ஆயத்தம்செய்யும் நோக்கத்துடன் அவர்களுக்குத் தொழிற்பயிற்சி நிலையங்களைத் தாபித்தலும் வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதலும் அதன் மூலம் இலங்கையிலுள்ள மக்களின் வறுமையைத் தணிக்கும் பொருளாதாரத் தராதரங்களை உயர்த்து தலும் ;

(ஆ) சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களையும் மருத்துவ மனைகளையும் தாபிப்பதற்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் அல்லது வேறுவகையில் நெடுந்தொலைவில் உள்ளவையும் அபிவிருத்தி குன்றியவையுமான இடப் பரப்புகளிலுள்ள மக்களின் சுகாதாரத்தின் மேம் பாட்டை ஊக்குவித்தலும் நோயாளர்களுக்குப் பகிர்ந் தளிக்கப்படுவதற்கு மருத்துவமனைகளுக்கும் சுகாதார நிலையங்களுக்கும் உபகரணங்கள், மருந்துகள், சில்லுக் கதிரைகள் மற்றும் ஏனைய பொருட்களை வழங்குத லும் ;

(இ) மத மற்றும் இன ஒற்றுமையை ஊக்குவிக்கக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல் ;

(ஈ) இளைஞர்களின் ஆளுமையின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடிய கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் மற்றும் இவற்றையொத்த நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துதலும் அதன்மூலம் பண்பட்ட சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புதலும் ;

(உ) மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அல்லது இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளையும், வீதிகளையும் நிர்மாணிப்பதன்மூலம் உதவிபுரிதலும் தங்கள் வழமையான வாழ்வாதாரத்தை மீண்டும் மேற்கொள்வதற்கு அத்தகைய ஆட்களுக்கு உதவிபுரிதலும் ;

(ஊ) வறியவர்களும் உதவி தேவைப்படுபவர்களுமான மாணவர்களுக்கு அவர்களது கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்கு புத்தகங்கள், உபகரணங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் என்பனவற்றை வழங்குவதன் மூலமும் வகுப்புகள் நடத்துவதன்மூலமும் அத்தகைய வறிய மாணவர்களுக்கு உதவிபுரிதலும் அவர்களது கல்வியைப் பூர்த்திசெய்வதற்கு நிதிரீதியில் அல்லது வேறுவகையில் உதவிபுரிதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தைப்போன்று ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளுதலும் அதன்மூலம் அத்தகைய நிறுவனங்களுக்கிடையில் வளங்களைப் பரிமாறுவதற்கு வசதியளித்தலும் ;

(ஏ) மக்களின் உடல், உள, சமூக மற்றும் புலமைத்துவ அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக மாநாடுகளுக்கும் கருத்தரங்குகளுக்கும் செயலமர்வுகளுக்கும் இவற்றையொத்த செயற்பாடுகளுக்கும் அனுசரணை வழங்குதல் ; அத்துடன்

(ஐ) உயிர்நீத்த படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்களின் சீர்நிலைக்கும் நல்வாழ்வுக்கும் நலம்பேணல் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு இச்சட்டத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துகையில் அத்தகைய நடைமுறைப்படுத்துதலானது இனம், சாதி, மதம், மொழி, பால்நிலை அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதலை கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டும்

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4.** (1) இச்சட்டத்தினதும் கூட்டுத்தாபனத்தின் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) ஆளும் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு ஏதேனும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற் படுத்துதல் மற்றும் மூடிவிடுதல் ;

(ஆ) பிணைப்பொறுப்புகளுடன் அல்லது பிணைப்பொறுப்பு களின்றி பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் : அத்துடன் மானியக்கொடைகள் மற்றும் நன்கொடை களைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது சேகரித்தல் :

ஆயினும், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும் முரணாகாதவகையில் ஆளும் பேரவையானது எல்லா வெளிநாட்டு மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தொதுக்கப் பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சின் வெளி நாட்டு வளங்கள் திணைக்களத்தின் முன்னங்கீகாரத் தைப் பெறுதல் வேண்டும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்கு உடனடியாகத் தேவைப்படாத கூட்டுத்தாபனத்தின் எவையேனும் நிதி களை கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு ஆளும் பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடிய விதத்தில் முதலீடுசெய்வதற்கு ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக் கூடியதும் அந்நோக்கத்திற்கு சட்டப்படி கொள்ளப் படக்கூடியதுமான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், குத்தகைக்கு அல்லது வாடகைக்குக் கொடுத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறுவகை யில் பெறுதல் அத்துடன் உசிதமானது எனக் கருதக் கூடியவாறு அதனைக் கையாளுதல் அல்லது கையுதிர்த்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை கொண்டுநடத்துவதற்குத் தேவையான ஊழியர்களை நியமித்தலும் தொழிலுக்கமர்த்துதலும் பதவிவிலக்குதலும் அத்துடன் ஆளும் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தை அவர்களுக்குச் செலுத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது ஆளும் பேரவையின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர்மூலமாகவோ செய்துகொள்ளுதலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை தகுந்தவிதத்திலும் பயனுறுதியுடன் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமான மற்றெல்லா விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை, கட்டுப்பாடு அத்துடன் நிருவாகம் என்பன இச்சட்டத்தினதும் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய தவிசாளரையும், செயலாளரையும், இரண்டு உதவிச்செயலாளர்களையும், பொருளாளரையும் அத்துடன் வேறு ஆறு உறுப்பினர்களையும்கொண்ட ஆளும் பேரவையால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* ஆளும் பேரவையின் செயல் அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று உள்ளது அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் தெரிவில் அல்லது பெயர்குறித்த நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*(3)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆளும் பேரவை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் ஆளும் பேரவையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் விதிகளுக்கிணங்க புதிய ஆளும் பேரவையொன்று நியமிக்கப்படும்வரைத் தொடர்ந்து பதவிவகித்தலும் வேண்டும்.

(4) ஆளும் சபையின் தற்போது பதவிவகிக்கும் தவிசாளரான திருமதி இந்திராணி தசநாயக அவர் முன்னரே பதவி விலகினாலன்றி ஆளும் பேரவையின் ஆயுட்கால தவிசாளராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் விடயங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவி விலகுதல், பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் அவர்களின் தத்துவங்கள், பணிகள், கடமைகள் அத்துடன் நடத்தை ;

(இ) ஆளும் பேரவையின் உறுப்பினர்களின் தெரிவும் அதன் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும் நடத்தையும் அத்துடன் ஆளும் பேரவையின் உறுப்பினர்களின் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்கள், கடமைகள் ; பணிகள், நடத்தை ;

(உ) ஆளும் பேரவையின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள், கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும், அத்தகைய கூட்டங்கள் இடம்பெறும் நேரங்கள், இடங்கள், அவைபற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதன் கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் அத்துடன் அதன் நிதியின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

**7**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் கொடைகள், மரணசாதன தத்துவக் கையளிப்பு, மானியக்கொடைகள், நன்கொடைகள் உதவுதொகைகள், அல்லது கட்டணங்கள் அல்லது ஏதேனும் நிதிசார் முதலீடுகள் என்றவகையில் இதனகத்துமுன்னர் அல்லது இதன்பின்னர் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் ஆளும் பேரவையினால் தீர்மானிக்க வேண்டியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

(2) கூட்டுத்தாபனம் கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை புனரமைக்கும், அபிவிருத்திசெய்யும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்கு பெறுமானத்தேய்வு நிதியமொன்றை அல்லது கடனாழ் நிதியமொன்றைத் தாபிக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் அத்துடன் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்கான எல்லாப் பணங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*மன்றத்தால் செலுத்தப்பட வேண்டியவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவையுமான தனிசுகள்.*

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று இருக்கின்றதான மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தித்தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சபைக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**10**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும், பொறுப்புகளையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய எல்லா உறுப்பாண்மைக் கட்டணங்களின் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**11**. (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கையின் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக் கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக் காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப் பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்த கைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன் றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும். அத்துடன் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் செயலாளரினதும் பொருளாளரினதும் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்ப மிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்ப மிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**13**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் செலுத்தித்தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின்

குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு அல்லது எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன் மீது அல்லது அதற்குமுன்னர் ஆளும் பேரவையால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசின் உரிமைகளைப் பேணுதல்.*

**14**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்